

# இயேசுவே
# நல்ல மேய்ப்பன் ஊழியம்

JESUS GOOD SHEPHERD MINISTRIES
CHENNAI - 82

## நம்பிக்கையின் வார்த்தை
## *Word of Hope*

**டிசம்பர் 2016**

**தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்.**

**- 1 யோவான் 5:11**


ஆசிரியர்

R. கிங் டேவிட்

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.





ஒவ்வொரு கிறிஸ்தவனும், இரட்சிப்பின் நிச்சயத்தை பெற விரும்புகிறான். அதாவது கிறிஸ்து திரும்பிவரும்போது அல்லது மரணம் வரும்போது அவனோ அல்லது அவளோ பரலோகத்தில் ஆண்டவராகிய இயேசுவோடு இருக்கும்படி அவரிடம் போவதற்குறிய நிச்சயம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்தால் நமக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நிச்சயம் உண்டு (1.யோவ 5:13 - 1.யோவ 4:15).

நம் ஆண்டவரும் இரட்சகருமாக அனுப்ப பட்ட இயேசு கிறிஸ்துவை தேவகுமாரனென்று அறிக்கையிடும் ஒரு உண்மையான விசுவாசம் இல்லாவிட்டால் நித்திய ஜீவனோ அல்லது இரட்சிப்பின் நிச்சயமோ நமக்கு கிடையாது.

கிறிஸ்துவை நம் வாழ்க்கைகளுக்கு ஆண்டவராக நமக்கு அவரை கனப்படுத்தி அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள உண்மையாகவே முயற்சித்தோமானால் நமக்கு நித்திய ஜீவனுக்குரிய நிச்சயம் உண்டு அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால் அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதனால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை, அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும், நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை இக்காரியங்களால் அறிகிறோம் (1.யோவா 2:3-5).

பாவத்தைக் காட்டிலும் நீதியை அதிகமாக பழக்கப்படுத்திக் கொண்டு தொடர்ந்து பயிற்சி செய்தால் நமக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நிச்சயம் உண்டு.

அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்கு தெரிந்திருப்பதினால், நீதியை செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள் அதற்கு மாறாக பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்.

நம் சகோதரர்களிடத்திலும், சகோதரிகளிடத்திலும் நாம் அன்பு கூருவோமானால் நமக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நிச்சயம் உண்டு.

நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் மரணத்தைவிட்டு நீங்கி

ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் இதனாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

கிறிஸ்துவின் வருகையில் அவரிடமாய் நம்மை ஏற்றுக்கொள்ளுவாரென்று ஒரு தீராத ஆசையும் ஒரு வளைந்து கொடுக்காத நம்பிக்கையும் நாம் கொண்டிருந்தோமானால் நமக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை உண்டு.

பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும் போது, அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, “தன்னையும் சுத்திகரித்துக் கொள்கிறான்”.

கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் அப்படியாக நம் இருதயத்தில் கிரிஸ்து இயேசுவை பிறப்பித்துகொள்ள வாஞ்சையுள்ளவர்களாக திகழ்வோம். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர் மேல் பிரியமும் உண்டாவதாக.

